
பக்கங்கள் 17+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 22 சனிக்கிழமை 08.11.2025 | அதிர்வு 102

## லொறி மோதி சிறுவன் சாவு!

### களுத்துறையில் துயரம்



களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காலி – கொழும்பு பிரதான வீதியில்,

02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# கொட்டாஞ்சேனை துப்பாக்கிச்சூட்டுடன் தொடர்புடைய பெண்ணொருவர் உட்பட மூவர் யாழில் இன்று சிக்கினர்!

## காரில் வந்த வேளை கைது

(ந.லோகதயாளன்)

கொழும்பு, கொட்டாஞ்சேனையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில், யாழ்ப்பாணத்தில் மூவர் காருடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொட்டாஞ்சேனைப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை இரவு வீதியில்



நடந்து சென்றவர் மீது , பின்னால் நடந்து வந்த நபர் ஒருவர் மிக அருகில் சென்று துப்பாக்கிச்சூட்டை நடத்தி விட்டு, பின்னர் கார் ஒன்றில் ஏறி, துப் பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி விழுந்தவர் மீது காரினை ஏற்றித் தப்பிச் சென்றிருந்தார்.

02

# குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் பதவி விலகத் தயார்

## சாமர ஒரு மனநோயாளி என்றும் சபையில் இன்று சிறீதரன் பதிலடி

உண்மைக்கும் அறத்துக்கும் மாறான வகையில் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவினால் தனக்கு எதிராக நாடாளு மன்றச் சிறப்புரிமை மீறல் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றச் சிறப்புரிமையை மீறியதாகத் தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பில்

02




# சட்டவிரோதமாகத் தமிழகம் சென்ற வல்வெட்டித்துறை இளைஞர் கைது!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் இருந்து சட்ட விரோதமாகப் படகில் பயணித்த ஒருவர் தமிழகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். வடமராட்சி, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மகாலிங்கம் கண்ணன் என்னும் 33 வயது இளைஞரே தமிழகப் பொலிஸாரால்கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேற்படி இளைஞர் தமிழகம் – நாகபட்டினத்தில் இறங்கி அங்கிருந்து இராமநாதபுரம் பயணித்துள்ளார்.

அவர் இராமநாதபுரத்தில் மண்டபம் அகதி முகாமில் தங்கியுள்ள தனது உறவினர்களைச் சந்திக்க முற்பட்ட சமயமே கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் மீது வழக்குப் பதிவு செய்யப் பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.



# திருகோணமலையில் கசிப்பு உற்பத்தி: தப்பியோடியவர் ஆற்றில் மூழ்கிப் பலி!

திருகோணமலையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்களைச் சுற்றி வளைத்து பிடிக்க முற்பட்ட வேளை ஆற்றில் இறங்கி தப்பியோடியவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

கிண்ணியா, உப்பாறு – களப்பு பகுதியை அண்டிய காட்டுப் பகுதிக்குள் நேற்று வெள்ளிக்கிழமை கசிப்பு உற்பத்தி இடம்பெறுகின்றது எனக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் அந்த இடத்தைச் சுற்றி வளைத்த போது, கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்தவர்கள் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.

இந்நிலையில், சிறிய படகு , அதற்கான வெளியிணைப்பு இயந்திரம் , கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப் படுத்தப்பட்ட உபகரணங்கள், 70 லீற்றர் கசிப்பு என்பன மீட்கப்பட்டன.

இதேவேளை, நேற்று ஆற்றில் இறங்கி தப்பியோடியவர் காணாமல்போன நிலையில், இன்று ஆற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கிண்ணியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ரயிலில் மோதி ஆண் ஒருவர் மரணம்!

ரயிலில் மோதி ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் களனி – வனவாசல பகுதியில் உள்ள ரயில் கடவையில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 5.35 மணியளவில் இடம்பெற்றுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.மாலம்பே – கடுவலை பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய நபரே உயிரிழந்தவர் ஆவார்.

சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.இது தொடர்பில் பேலியகொடை பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

## லொறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெட்டுமகட சந்திக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

காலியில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த லொறி ஒன்று, வீதியின் குறுக்கே சைக்கிள் ஓட்டிச் சென்ற சிறுவன் மீது மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் பலத்த காயமடைந்த சிறுவன், களுத்துறை – நாகொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கட்டுகுருந்த பகுதியைச் சேர்ந்த 11 வயதுடைய சிறுவன் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் களுத்துறை நாகொட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை தெற்கு பொலிஸார், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கொட்டாஞ்சேனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில் பொருத்தியிருந்த கண்காணிப்பு கமராக்களில் பதிவாகியிருந்தன.

இந்நிலையில் சம்பவத்துடன் தொடர்புடைய காரை ஒத்த காரில் யாழ்ப்பாணத்தில் பயணித்த, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், பெண் ஒருவர் மற்றும் தென்னிலங்கை நபர் என மூவர் இன்று பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தாம் கொழும்பில் காரை வாடகைக்குப் பெற்று யாழ்ப்பாணத்துக்குச் சுற்றுலா வந்தனர் என்றும், தமக்கும் கொலைக்கும் தொடர்பு இல்லை எனவும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரையும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வரும் அதேவேளை, கொழும்பில் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள விசேட குழு , கைது செய்யப்பட்டவர்களை விசாரணை செய்வதற்காக யாழ்ப்பாணம் நோக்கி விரைந்துள்ளனர் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கொழும்பில் இடம்பெறும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் மற்றும் குற்றச்செயல்களில் ஈடுபடுவோர், யாழ்ப்பாணம் ஊடாக இந்தியாவுக்குத் தப்பிச் செல்வது அதிகரித்துள்ள நிலையில் , யாழ்ப்பாணம் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புக்களை பாதுகாப்புத் தரப்பினர் அதிகரித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கொட்டஞ்சேனையில் நேற்று இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த நபர், அந்தப் பகுதியைச் சேர்ந்த 41 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மேற்படி நபர் திட்டமிட்ட குற்றவாளியான பூங்கொடி கண்ணாவுக்கு நெருக்கமானவர் என்றும், இரண்டு குற்றக் கும்பல்களுக்கு இடையிலான தகராறு காரணமாக இந்தத் துப்பாக்கிச்சூடு நடந்திருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

## குற்றச்சாட்டுக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் இன்று சபையில் கருத்துத் தெரிவித்தார். 2026ஆம் ஆண்டு பாதீட்டின் இரண்டாம் வாசிப்பு மீதான முதல் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு அவர் உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறினார்.

முன்னதாக, நாடாளுமன்றச் சிறப்புரிமையை சிறீதரன் எம்.பி. மீறினார் எனக் குறிப்பிட்டு சாமர சம்பத் தசநாயக்க எம்.பியால் நாடாளுமன்றச் சிறப்புரிமை மீறல் பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இது குறித்து தமது நிலைப்பாட்டை நாடாளுமன்றில் சிறீதரன் எம்.பி. இன்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பொது நலன் மற்றும் மக்கள் நலனில் கவனம் எடுத்து எனது முடிவுகளை மிகத் தெளிவாக அரசமைப்பு சபையில் முன்வைத்துள்ளேன்.

எனது கட்சிக்காகவோ, தனிநபர்களின் அழுத்தத்துக்காகவோ எனது முடிவுகளை நான் மாற்றிக்கொள்ளவில்லை.

எந்தவித வெளிப்புற அழுத்தமும் என் மீது பிரயோகிக்கப்படவில்லை, பிரயோகிக்கவும் முடியாது என்பதைக் கடந்த ஓராண்டு காலமாக நேர்மையுடனும், கண்ணியத்துடனும் நிரூபித்துள்ளேன்.

சிவில் புத்தி பெரமுன எனப்படும் அமைப்பைச் சேர்ந்த ஒருவரால் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவில் நான் சொத்துக்கள் குவித்து வைத்திருப்பதாககே கடந்த ஜூலை மாதம் முறைப்பாடு செய்யப்பட்டதாக நாளிதழ்களிலும், சமூக ஊடகங்களிலும் பார்வையிட்டு இருந்தேன்.

குறித்த செய்திக்குப் பின்னர் வெளிப்படையான விசாரணைகளை செய்து உண்மையை வெளிப்படுத்துமாறு கூறியிருந்தேன்.

இன்று 3 மாதங்கள் ஆகியும் நிதிகே குற்றப் புலனாய்வுப் பிரிவால் எந்த முடிவுகளும் வெளியிடப்படவில்லை.

எனது பெயரிலோ, எனது குடும்ப உறுப்பினர்களது பெயரிலோ சொத்துக்கள் இருந்தால் விசாரணை செய்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பகிரங்கமாகக் கேட்கின்றேன்.

எனது பெயரிலோ, எனது சிபாரிசிலோ கடந்த காலங்களில் மதுபானசாலைகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் ஏதும் பெற்றிருந்தால் உடன் வெளிப்படுத்தி என் மீது சட்டநடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றேன்.

ஊவா மாகாணத்தின் முதலமைச்சராக சாமர சம்பத் தசநாயக்க பணியாற்றிய போது அவர் ஒரு தமிழ்ப் பெண் அதிபரை முழங்காலில் இருத்தி வைத்து விசாரித்த ஒரு மனநோயாளி என்பதையும் நான் இங்கு பதிவு செய்ய விரும்புகின்றேன்.

என் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கும் பட்சத்தில் நானா பதவி விலகவும் தயாராகவுள்ளேன்.”

– என்றார்.



# வீரமுனையில் சிறப்பாக நடைபெற்ற சம்மாந்துறை வலய மாணவர் நாடாளுமன்ற நிகழ்வு!

**(வி.ரி. சகாதேவராஜா)**

சம்மாந்துறை கல்வி வலய மட்ட மாணவர் நாடாளுமன்ற நிகழ்வு வீரமுனை இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேந்திரகுமார் பங்குபற்றுதலுடன் சிறப்பாக நடைபெற்றது.

மாணவர் நாடாளுமன்ற விடயத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எச்.நைரூஸ்கான் நெறிப்படுத்தினார். வலய பாடசாலைகளின் சிறப்பு மாணவர்கள் பங்கேற்ற இவ வலய மட்ட நாடாளுமன்ற அமர்வின் போது பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

ஏலவே பாடசாலை ரீதியாக மாணவர் நாடாளுமன்ற அமர்வுகள் நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.





















# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கிறுக்குப் பேச்சு!

அரசியல்வாதிகள் தேர்தல்களில் வெல்வதற்காக வாக்குறுதிகளை அள்ளி வீசி, அதைச் செய்வோம், இதைச் செய்வோம் என்று வெட்டி வீழ்த்துவதும், பின்னர் அதிகாரத்துக்கு வந்து ஆட்சியைக் கைப்பற்றிய பின்பு, அவற்றைச் செய்யாமல் பொறுப்பை பிற தரப்புகள் மீது சுமத்தித் தாங்கள் நழுவிக் கொள்வதும் இலங்கை அரசியலில் புதிய விடயங்கள் அல்ல.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை அடியோடு மாற்றுவேன் என்று முன்னைய - மற்றைய - ஜனாதிபதிகள் போல வாக்குறுதி கொடுத்து அதிகாரத்துக்கு வந்த மைத்திரிபால சிறிசேன, சில காலத்தின் பின்னர் அரசமைப்பு மாற்றத்தை செய்ய வேண்டியது நாடாளுமன்றமே தவிர நான் அல்லன், என்று கையை விரித்தமை இலங்கையில் நடந்ததுதான்.

ஆயினும் கூட, அதிலும் ஒரு நியாயம் இருந்தது. அவர் அதிகாரத்தை ஏற்று, பொதுத் தேர்தலை நடத்திய போது நாடாளுமன்றத்தில் அவருக்குக் கிட்டிய பெரும்பான்மை ஆதரவு, காலப் போக்கில் சரிந்து, பிளவுண்டு, பெருமளவில் இழந்து போன பின்னணியில், அரசமைப்பை தனித்து தமது நிறைவேற்றதிகார அழுத்தத்தைப் பயன்படுத்தி மாற்றம் செய்கின்ற நிலைமையில் அவர் இருக்கவில்லை. அதனால் அப்போது அவரது கூற்றில் ஒரு நியாயம் இருந்தது.

ஆனால் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அதிகாரத்துக்கு வர முன்னர் பேசிய பேச்சை - வழங்கிய உறுதி மொழியை - ஓர் ஆண்டுக்குள் புரட்டிப் போட்டு, மக்களை முட்டாள்களாக்க முனைகிறார். அதுதான் வேடிக்கையானது.

மாகாண சபைத் தேர்தலைத் தாங்கள் அதிகாரத்துக்கு வந்தால் ஓராண்டுக்குள் நடத்தி முடிப்போம் என்று உறுதிமொழி தந்த ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இப்போது பந்தை எதிர்க்கட்சி தரப்புக்குள் அடிக்க முயற்சிக்கின்றார்.

ஒன்பது மாகாணங்களிலும் தேர்தல்களை நடத்துவதற்கு தமது வரவு - செலவுத் திட்டத்தில் ஆயிரம் கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்வதாக வெற்று அறிவிப்பு விடுத்த ஜனாதிபதி, ஆனால் மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை நடத்துவதில் சட்டப் பிரச்சினை இருப்பதாகவும், புதிய சட்டத்தை கொண்டு வருவதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனை பெற வேண்டி இருப்பதாகவும் கூறுகின்றமையோடு, அதற்கு அப்பாலும் போய் அதற்கான சட்டத்தை ஆக்கித் தாருங்கள் என்று எதிர்க்கட்சியினரை பார்த்து பகிரங்கமாகக் கூறி, நையாண்டி பண்ணியிருக்கின்றார்.

அரசமைப்பையே முழுமையாக மாற்றுவதற்கு தேவையான மூன்றிலிரண்டு பங்கு நாடாளுமன்றப் பெரும்பான்மை அதிகாரத்தை தமது சட்டைப்பைக்குள் வைத்துக்கொண்டு, இவ்வாறு பகிரங்கமாகக் கயிறு விடுகின்றார் ஜனாதிபதி என்பதுதான் வெளிப்படையான உண்மை.

மாகாண சபைத் தேர்தல்களை பழைய தேர்தல் முறைப்படியே நடத்தும் படி எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒற்றைக் காலில் வலியுறுத்துகின்றன. அப்படிச் சட்டத்தை கொண்டு வருவதற்கு நாடாளுமன்றில் சாதாரண பெரும்பான்மையும் சில வார காலமும் போதும். அவ்வாறு சட்ட மூலம் அவரின் அரசின் நகர்வாக முன்வைக்கப்படுமானால் நாடாளுமன்றில் அது முழு - ஏகமனதான - ஆதரவோடு நிறைவேற்றப்படக்கூடிய நிலைமையும் உள்ளது.

இந்தப் பின்புலத்தில் பந்தை எதிர்க்கட்சியின் களத்தில் அடித்து, மக்களை ஏமாளியாக்கும் தந்திரப் பேச்சை இந்த ஜனாதிபதியும் கைவிடாமல் பின்பற்றுகின்றார் என்பதுதான் உண்மை நிலைவரம் ஆகும்.

# முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் மருத்துவர்கள் பற்றாக்குறையை நீக்குங்கள்!

## குடிசார் அமைப்புக்கள் கோரிக்கை விடுப்பு



(த.சுபேசன்)

முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலையில் தற்போது நிலவி வரும் மருத்துவர்கள் பற்றாக்குறையை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறு, முல்லைத்தீவு மாவட்ட குடிசார் அமைப்புகளின் பிரதிநிதிகளால் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற மாகாண மட்ட ஊராட்சி முற்றக் கலந்துரையாடலின் போதே அவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்திருந்தனர்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த குடிசார் அமைப்புகளினுடைய பிரதிநிதிகள்,

வடக்கே விசுவமடு முதல் தெற்கே வெலிஓயா வரையிலும் அத்துடன் கிழக்கே முல்லைத்தீவு முதல் மேற்கே துணுக்காய் வரையான பெரிய ஒரு நிலப்பரப்பைக் கொண்ட முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு மருத்துவ சேவையை வழங்கி வரும் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை பாரிய வளப்பற்றாக்குறையுடன் இயங்கி வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரி இல்லை.அத்துடன் மகப்பேற்று மருத்துவ நிபுணர் ஒருவர் மாத்திரமே 24 மணி நேரமும் கடமையாற்றுகின்றார். அதேநேரம் குழந்தை நல மருத்துவ நிபுணர் ஒருவர் மட்டுமே பொறுப்பில் இருக்கின்றார். அவருக்கும் தற்போது இடமாற்றம் கிடைத்துள்ளது.

இவ்வாறான ஒரு நிலைமையில் முல்லைத்தீவு மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

குறிப்பாக விபத்தில் சிக்கி ஒருவர் இறந்த பின்னர் அவருடைய உடலை யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி மருத்துவ அறிக்கை பெற்ற பின்னரே உடலை உறவினர்களுடன் வழங்கும் நடைமுறை காணப்படுகின்றது. இதனால் உறவினர்கள் பெரும் சிரமங்களுக்கும் மன உளைச்சல்களுக்கும் ஆளாகின்றனர்.

அதனை விட 24 மணி நேரமும் ஒரே வைத்தியர் கடமையாற்றுவதால் அவர்களுக்கு உடல் மற்றும் உளரீதியான தாக்கங்கள் நிச்சயமாக ஏற்படும்.

எனவே, வைத்தியசாலையின் வெற்றிடங்களுக்கு ஏற்ப பொருத்தமான மருத்துவர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆழிப்பேரலை மற்றும் போர் போன்ற அனத்தங்களால் மிகவும் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு உரிய மருத்துவ வசதிகளை ஏற்படுத்தி அவர்களுடைய இன்னல்களைத் தீர்த்துத் தாருங்கள் என்றனர்.

# சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுவோர் மீது விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

## தேசிய மக்கள் சக்தியின் வடமராட்சி அமைப்பாளர் சாம் தெரிவிப்பு




(பூ.லின்ரன்)

வடமராட்சி கிழக்கில் இடம் பெறும் சட்டவிரோத மணல் அகழ்வு, மற்றும் சட்டவிரோத கடற்றொழில்கள் செய்வோர் தொடர்பில் மிக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேசிய மக்கள் சக்தியின் வடமராட்சி அமைப்பாளர் சாம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கில் பல்வேறு இடங்களில் சட்டவிரோத மணல் மண் கொள்ளை பகலிரவாக இடம் பெறுகின்றமை, சட்டவிரோத கடற்றொழில்கள் இடம்பெற்று வருமின்றமை தொடர்பாக தேசிய மக்கள் சக்தி அரசு ஆட்சிக்கு வந்து ஒருவருடம் கடந்தும் கட்டுப்படுத்த முடியவில்லை என்று ஊடகவியலாளர்கள் ஏழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே வடமராட்சி தேசிய மக்கள் சக்தி அமைப்பாளர் சாம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசின் கீழ் இயங்கும் அரச இயந்திரம் அதாவது அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கத் தவறுகின்றனர். நடவடிக்கை எடுக்கவேண்டிய அதிகாரிகள் பலர் அதனைக் கண்டுகொள்ளாமல் உள்ளனர்.

அவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்ட பின்னர் சட்டவிரோத தொழில்களில் ஈடுபடுவோர்கள் தொடர்பில் மிக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாவீரர் தொடர்பில் தமது அரசு மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் நல்ல தீர்மானம் எடுத்துள்ளது. இதனால் மக்கள் அச்சமின்றி இறந்தவர்களை நினைவு கூருவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்



# சாவகச்சேரி சுகாதாரத் தொழிலாளருக்கு உதவித் திட்டம் வழங்கிக் கௌரவிப்பு

**(த.சுபேசன்)**

சாவகச்சேரிப் பிரதே சபையில் கடமையாற்றுகின்ற 30 சுகாதாரத் தொழிலாளர்களுக்கு உதவிப் பொருள்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

நாவற்குழி கிழக்கு கைதடியைச் சேர்ந்த சமாதான நீதிவான் அமரர் வை.சரவணமுத்துவின் 41 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அவருடைய பிள்ளைகளால் உபதவிசாளர் யோகேஸ்வரனின் ஏற்பாட்டில் இந்தச் செயற்றிடம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை கௌரவிப்பு மற்றும் உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வில் சாவகச்சேரிப் பிரதேச சபைத் தவிசாளர் பொ.குகதாசன், உப தவிசாளர் இ.யோகேஸ்வரன், சபையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.



# புத்தளம் புளிச்சாக்குளம் உமர் பாரூக்குக்கு இந்த வருடம் மூன்றாவது தேசிய சாதனை



**(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)**

புத்தளம் புளிச்சாக்குளம் உமர் பாரூக் மகா வித்தியாலய மாணவி தேசியமட்ட மெய்வல்லுனர் நிகழ்வில் உயரம் பாய்தல போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இது பாடசாலை வரலாற்றில் இவ்வருடத்தில் புளிச்சாக்குளம் உமர் பாரூக் மகா வித்தியாலயம் பெற்றுக் கொண்ட மூன்றாவது தேசிய வெற்றியாகும் என பாடசாலையின் அதிபர் எம். யூ.எம்.சாஜஹான் தெரிவித்துள்ளார்.

இந்த மாணவிக்கான கௌரவிப்பு நிகழ்வு பாடசாலையில் இடம்பெற்றது.

# கட்டைக்காடு சென்.மேரிஸ் வி.கழகத்தால் கசிப்பு முற்றுகை; சந்தேக நபர்கள் ஓட்டம்!





(பூ.லின்ரன்)

கட்டைக்காடு சென்மேரிஸ் விளையாட்டுக் கழகத்தால் கசிப்பு விற்பனை செய்யப்பட்ட இடம் முற்றுகை செய்யப்பட்ட நிலையில் சந்தேக நபர்கள் தப்பி ஓடினர்.

வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் சட்டவிரோத செயற்பாடுகளைத் தமது பகுதியில் முற்றாக அழித்தொழிப்பது என்னும் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

இதன் ஒரு பகுதியாக இன்று காலை சென்மேரிஸ் விளையாட்டுக் கழகத்தின் நிர்வாகத்துக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் கசிப்பு குடிப்பதற்காக பலர் கூடியிருந்த காட்டுப்பகுதி திடீரென சென்மேரிஸ் விளையாட்டுக் கழகத்தால் முற்றுகையிடப்பட்டது.

இந்த முற்றுகையின்போது கசிப்பு பரலை கைவிட்டு அங்கு கூடியிருந்தவர்கள் தப்பிச் சென்றுள்ளனர். கசிப்புடன் கசிப்பு பரல் சென்மேரிஸ் விளையாட்டுக் கழகத்தால் கைப்பற்றப்பட்டு எரியூட்டப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கை சென்மேரிஸ் விளையாட்டுக் கழக தலைவரும் பருத்தித்துறை பிரதேசசபை உறுப்பினருமான பி.அலஸ்ரன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

தமது எல்லைக்குள் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளை உடன் நிறுத்துமாறும் மீறினால் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைப்போமென சென்மேரிஸ் விளையாட்டுக் கழகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கழகத்தின் முன்மாதிரியான இந்தச் செயற்பாட்டை பலரும் பாராட்டி வருகின்றனர்.

# மட்டக்களப்பு குருக்கள்மடத்தில் விபத்தில் 3 பேருக்குக் காயம்!



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு குருக்கள்மடத்தில் இடம்பெற்ற விபத்தில் 3 பேர் பலத்த காயங்களுக்கு ஆளாகியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குருக்கள்மடம் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை (07) இரவு ஓட்டோ ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 3 இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு கல்முனை வீதியில் மட்டக்களப்பு பகுதியிலிருந்து மாங்காடு நோக்கி பயணித்துக்கொண்டிருந்த ஓட்டோவே விபத்தில் சிக்கிக்கொண்டுள்ளது.

விபத்தில் காயமடைந்த 3 பேரும் முதலில் செட்டிபாளையம் பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக அவர்கள் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.



# கொழும்பு சைவமங்கையர் வித்தி. வருடாந்த பரிசளிப்பு விழா நிகழ்வு

கொழும்பு சைவமங்கையர் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த 5ஆம் பாடசாலை மங்கையர் மண்டபத்தில் அதிபர் அருந்ததி இராஜ விஜயன் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக இலங்கை தேசிய வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் டாக்டர் கலாநிதி ஜமுனானந்தா, திருமதி நித்திலா ஜமுனானந்தா, சிறப்பு விருந்தினராக சைவமங்கையர் கழக முகாமையாளர் செல்வி மலா சபாரட்ணம் மற்றும் பாடசாலை முகாமைத்துவ உறுப்பினர்கள், பாடசாலை ஆசிரியர்கள், சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் சகல துறை சாதனையாளர் விருதைப் பெற்ற மாணவி ஜெகநாதன் அக்சஜா வுக்கு பிரதம அதிதி கேடயம் வழங்கி கௌரவித்தார்.












# கல்முனை ஹுதா பள்ளிவாசல் ஏற்பாட்டில் போதைப் பொருள் ஒழிப்பு பிரகடனம்!

(எஸ்.அஷ்ரப்கான்)

போதைப் பொருள் ஒழிப்பு பிரகடனம் மற்றும் சத்தியப்பிரமாண நிகழ்வு கல்முனை ஹுதா பள்ளிவாசல் ஏற்பாட்டில் தஃவா குழுவின் பங்குபற்றுதலுடன் நேற்று (07) பள்ளிவாசல் தலைவர் ஏ.எம்.இப்றாஹீம் தலைமையில் பேஷ் இமாம் மௌலவி சாபித்தில் வழி நடத்தலில் இடம்பெற்றது.

அதிதியாகக் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.ஏ.எல்.லசந்த களுஆராச்சி, கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகரும் பொது மக்கள் பாதுகாப்புக் குழுவின் பொறுப்பதிகாரியுமான ஏ.எல்.ஏ வாஹிட், கல்முனை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் என்.எம் அஷ்ரப், பள்ளிவாசல் நிர்வாக செயலாளர் எம்.வி.எம். தன்சீல், பள்ளிவாசல் பிரதி நிர்வாக செயலாளர் எம்.ஐ.சமாயின் ஆகியோருடன் உலமாக்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், தஃவா குழு உறுப்பினர்கள், பொது மக்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது, மௌலவி அதிதிகளின் போதைப் பொருள் சம்பந்தமான உரைகள் இடம்பெற்றன. இறுதியாக போதைப்பொருள் ஒழிப்பு பிரகடனம் மற்றும் சத்தியப்பிரமானமும் நடைபெற்றது.




இதன்போது அங்கு ஒன்று கூடியிருந்த மக்கள் அனைவரும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் உண்மைக்குண்மையான குடிமகனாகிய நான் போதைப்பொருள் பாவனை, விற்பனை, கடத்தல் போன்ற எந்த வகையான குற்றச்செயல்களிலும் ஈடுபட மாட்டேன் என்றும், போதைப்பொருள் வர்த்தகத்துக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் துணை நிற்க மாட்டேன் என்றும், பாவனையாளர்கள், போதைப் பொருள் விற்பனையாளர்களை அரசுக்கு அடையாளப்படுத்தி எம் நாட்டில் நிலைகொண்டுள்ள மிக மோசமான போதைப் பொருள் கலாச்சாரத்தை முற்றாக ஒழித்திடவும், எதிர்கால சந்ததிகள் நிம்மதியாக வாழ்ந்திடவும் என்னாலான முயற்சிகளை முழுமையாக முன்னெடுப்பேன் என்றும் இப்பணியில் அரசுக்கும் அதிகாரிகளுக்கும். பாதுகாப்புத் துறையினர்களுக்கும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவேன் என்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் இறைவன் சாட்சியாக உறுதிமொழி வழங்கி சத்தியப்பிரமானம் செய்து கொண்டுள்ளனர்.







# இலங்கையின் சுற்றுச்சூழல் சவால்களை ஆராயும் ஆவணப்படம் FOOTPRINT!

## திருகோணமலை வளாகத்தில் திரையிட்டு வைப்பு





(ஹஸ்பர் ஏ.எச்.)

கிழக்கு பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்தில் “FOOTPRINT” எனும் ஆவணப் படம் திரையிடப்பட்டது.

குறித்த நிகழ்வு நேற்று (07) பல்கலைக்கழக திரைப்பட மண்டபத்தில் இடம் பெற்றது.

“FOOTPRINT”பாதச்சுவடு என்பது இலங்கையின் மிக அவசரமான சுற்றுச்சூழல் சவால்களை நான்கு முக்கிய அத்தியாயங்களின் மூலம் ஆராயும் ஒரு உணர்ச்சிகரமான மற்றும் காலத்துக்கு பொருந்தக்கூடிய இலங்கை ஆவணப்படமாகும்.

கொழும்பில் நகரமயமாக்கல், நீர் பாதுகாப்பு, விலங்கு வேளாண்மை, மற்றும் மனித – யானை இணைவியலை கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு அத்தியாயமும் முக்கியமான பிரச்சினைகளுக்கு நுழைந்து, மனித செயல்பாடு மற்றும் சுற்றுச்சூழல் இடையேயான சிக்கலான உறவைக் கவனிக்கிறது.

கொழும்பின் விரைவு வளர்ச்சி மற்றும் அதனால் இயற்கை வளங்களுக்கு ஏற்படும் அழுத்தம், நீர் மாசுபாடு மற்றும் பற்றாக்குறையின் எதிர்கால நெருக்கடி ஆகியவற்றை குறித்த ஆவணப் படம் தெளிவாக காட்டுகிறது.

மேலும், விலங்கு வேளாண்மையின் சுற்றுச்சூழல் விளைவுகளையும் ஆராய்ந்து, நிலையான நடைமுறைகளுக்கு தலைமுறை மாற்றத்தை வெளிப்படுத்துகிறது, மற்றும் வளர்ச்சி வனவிலங்குகளின் வாழ்விடங்களை பாதிக்கும் போது மனிதர்களும் யானைகளும் இடையேயான மோதலை பதிவு செய்கிறது.

இந்த ஆவணப்படம் இலங்கையின் எட்டு திறமையான இயக்குனர்களான ஷணகா போடியபடுகே, அசங்க ஜெயவர்தன, யோஷிதா பேரேரா, சமீர வீரசேகரா, மலிந்த ஹிடெலாரச்சி, கிரிஷன் ராஜரத்தினே, உதர அபேசுந்தரா மற்றும் சணக விஜமுனிகே ஆகியோரின் ஒத்துழைப்பில் உருவாக்கப்பட்டு, உண்மைத் தன்மையுடனும் அவசரத்துடனும் இந்த முக்கிய கதைகளை சொல்லி வருகிறது.

பாதச்சுவடு திரைப்படம் ‘தி மூவ்மெண்ட் லேப்’ நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு, கிரீன் பிக்சர்ஸ், எம்பதி பிலிம்ஸ், வெக்வாயஜஸ் ஃபவுண்டேஷன் மற்றும் த்ரைவ் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து, கலை இயக்குநர் சுமுது மலலகாமா, இணை தயாரிப்பாளர்கள் சொப்னா யூசி மற்றும் ஷோவா புஜேல், மற்றும் நிர்வாக தயாரிப்பாளர்கள் ஜாக் லோவாஸ் மற்றும் டாக்டர் ஹர்ஷா அட்டமகுரி ஆகியோரின் பங்களிப்பில் உருவாக்கப்பட்டது.






# வடக்கு மாகாணத்துக்கு ஒரே தடவையில் அதிகூடிய ஆயுள்வேத மருத்துவர்கள்!

## ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண ஆளுநர்

பொருளாதார நெருக்கடி முகம் கொடுத்து மீண்டெழுந்து கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் எமது வடக்கு மாகாணத்துக்கு ஒரே தடவையில் அதிகூடிய ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்களை வழங்கியமைக்காக தேசிய மக்கள் சக்தி அரசின் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, சுகாதார அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ ஆகியோருக்கு வடக்கு மக்கள் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் கீழ் இயங்கும் மாகாண சுதேச வைத்தியத்துறைத் திணைக்களத்துக்கு 42 ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 36 பேர் சுதேச வைத்தியத்துறையின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளுக்கும் 6 பேர் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தின் கீழும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமன நிலையங்களை வழங்கும் நிகழ்வு பண்ணையிலுள்ள சுகாதாரக் கிராமத்தில் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் நேற்று (07) நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய ஆளுநர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

வேலை இல்லை என்று சொல்லி தங்களுக்கு அரச வேலை கோருவார்கள். வேலை கிடைத்த பின்னர் வீட்டுக்குப் பக்கத்தில் திணைக்களத்தைக் கேட்பார்கள். நீங்கள் அப்படிச் செய்யக்கூடாது. இதுவரை காலமும் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய 4 மாவட்டங்களிலும் ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்கள் இல்லாமையால் அந்தந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் மிகப் பெரும் சவால்களை நாம் சந்தித்திருந்தோம். இந்த நியமனங்கள் ஊடாக அது சரிசெய்யப்பட்டுள்ளது.

சுதேச மருத்துவம் என்பது ஒரு சாதாரண சிகிச்சை முறை மட்டும் அல்ல. அது நமது தொன்மையான பண்பாட்டு மரபின் உயிரோட்டம். நமது மண்ணின் செடிகள், மூலிகைகள், இயற்கை வாழ்வியல் நடைமுறைகள் மற்றும் தலைமுறைகளின் அனுபவ ஞானத்தின் அழகிய சங்கமமே இந்த சிகிச்சை முறை. இந்த மரபு தொலைந்து போகாமல் பாதுகாக்கப்பட வேண்டும் புதிய தலைமுறைக்கு உரிய முறையில் பரிமாறப்படவேண்டும் அதில் நீங்கள் வகிக்க உள்ள பங்கு மிகப் பொறுப்பானதும் பெருமைமிக்கதுமாகும்.

எமது நோக்கம் தெளிவானது . மக்கள் வாழும் எல்லா இடங்களுக்கும் சுகாதார சேவை சென்றடைய வேண்டும். நகர மையங்களில் மட்டுமல்ல தொலைதூர கிராமங்களின் கடைசிக் குடியிருப்புகளுக்கும் அது கிடைக்க வேண்டும். இந்தப் பயணத்தில், ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்களாகிய நீங்கள் மக்களுக்குச் செல்லக்கூடிய மிக அருகாமையான நம்பிக்கையான மருத்துவ சேவை ஆளுமைகளாக இருப்பீர்கள்.

உங்கள் சேவை ஒரு மருந்தளிப்பு அல்ல, அது ஒரு ஆறுதல், ஒரு நம்பிக்கை, ஒரு மனிதநேயம். இன்று நீங்கள் பெறும் நியமனம் ஒரு வேலை வாய்ப்பு அல்ல. இது ஒரு மக்கள் சேவைக்கான உறுதி. மக்கள் உங்களை நம்பி வரும்போது, அந்த நம்பிக்கையை நீங்கள் காக்க வேண்டும்.

இதுவரை பல துறைகளில் மக்கள் சேவை பெரும்பாலும் அலட்சியப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதையும் நாம் நன்கு அறிவோம். நீங்கள் அந்த வரலாற்றின் தொடர்ச்சியாக இல்லாமல், அத்தருணத்தை மாற்றும் தலைமுறையாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு நோயாளியையும் சந்திக்கும் போது, ‘இந்த நிலையில் நான், அல்லது எனது குடும்பம் என்றால் நான் எப்படி அணுகுவேன்?’ என்று நீங்கள் உங்களிடம் கேளுங்கள். அந்த ஒரு கேள்வியே உங்களை சிறந்த சேவை வழங்கும் வழியில் நடத்தி செல்லும்.

வடக்கு மாகாண சுதேச வைத்தியத்துறை திணைக்களத்தை, மக்கள் சேவைக்கு மிக நெருக்கமான, அணுகத்தக்க மற்றும் செயல்திறனான இடத்தில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மாகாண நிர்வாக அலுவலகங்களை யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு மட்டுமே வைத்திருக்காமல், மாகாணம்

தொடர்ச்சி▼









# வடக்கு மாகாணத்துக்கு ஒரே தடவையில் அதிகூடிய ஆயுள்வேத மருத்துவர்கள்!

## ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண ஆளுநர்




தொடர்ச்சி▲

முழுவதுக்கும் அணுகுமுறையை சமமாக்கும் வகையில் பல திணைக்களங்கள் நிலப்பரப்பாகப் பகிர்ந்தளிக்கப் படுகின்றன. கிளிநொச்சியில் காணித் திணைக்கள அலுவலகம் திறக்கப் பட்டுள்ளதும், மாங்குளத்தில் நீர்பாசனத் திணைக்களம் செயல்பட்டு வருகின்றதும் அதன் எடுத்துக்காட்டுகளாகும். இதே போன்று, சுதேசவைத்தியத்துறையையும் மக்களுக்கு அதிகளவில் பயனளிக்கும் மையத்திலேயே நாம் அமைப்போம்.

நீங்கள் சேவையாற்றத் தயாராகுங்கள். உங்களின் உரிமைகளையும் நலன்களையும்பாதுகாக்கும்பொறுப்பை ரசும் மாகாண நிர்வாகமும் ஏற்றுக் கொண்டுள்ளன. உங்களின் சேவையின் தொடக்கம் இன்று. அந்த சேவையின் அர்த்தத்தை மக்கள் தீர்மானிப் பார்கள். நீங்கள் அவர்கள் மனதில் நம்பிக்கையின் விளக்காக விளங்கிட வாழ்த்துகிறேன்.–என்றார்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரின் இணைப்பாளர் சு.கபிலன், வடக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி ப.ஜெயராணி, மாகாண சுதேச வைத்தியத்துறைத் திணைக்களத்தின் ஆணையாளர் வைத்திய கலாநிதி தில்லையம்பலம் சர்வானந்தன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.





# புத்தளம் சாலியவெவ பஸ் நிலையத்தின் அவலம்

**(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)**

புத்தளம்சாலியவெவசந்தியில்உள்ள பஸ் நிலையம் முறையான பராமரிப்பு இல்லாததாலும், குப்பைகளை முறையாக அகற்றாததாலும் பஸ் நிலையத்தின் சூழல் மிகவும் மோசமடைந்து வருகிறது என்று பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த பஸ் நிலையத்தில் உள்ள கழிப்பறை பராமரிப்பு இல்லாததால் பயன்படுத்த முடியாது என்று மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே இயக்கப்படும் நீண்ட தூர பஸ்கள் சாலியவெவ பஸ் நிறுத்தத்தில் நிறுத்தப்பட வேண்டும். ஆனால் இந்த மோசமான சூழ்நிலையால், பயணிகள் தங்கள் தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சாலியவெவ தபால் அலுவலகம் மற்றும் பொது நூலகமும் அதே பஸ் நிலைய வளாகத்தில் அமைந்துள்ளன. இந்த சூழ்நிலை இந்த நிறுவனங்களில் இருந்து சேவைகளைப் பெற வரும் மக்களுக்கு பெரும் சிரமத்தை ஏற்படுத்துவதாக குடியிருப்பாளர்கள் கூறுகின்றனர்.

பஸ் நிலையம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதி குப்பைகளை கொட்டும் இடமாக மாறியுள்ளது. பஸ் நிலையம் முழுவதும் வெற்றிலை துப்பிக் காணப்படுகிறது.

வடமேல் மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபைக்குச் சொந்தமான ஒரு அலுவலகமும் குறித்த பஸ் நிலையத்தில் உள்ளது.

குடியிருப்பாளர்களின் முறைப்பாடுகளைத் தொடர்ந்து, சாலியவெவ பொது சுகாதார ஆய்வாளர் நீல் ஜெயசிங்க இந்த பஸ் நிலையத்தைப் பார்வையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பானுஷா நிமல்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# சாம்பலிலிருந்து மலர்ந்த அறிவின் ஒளி...!

"ஒரு புத்தகத்தை எழுதி வேண்டும் என்றால் பாதி நூலகத்தையாவது படிக்க வேண்டும்" யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டு 44 ஆண்டுகள் கடந்துவிட்டன இன்றும் அதன் அவலத்தை நாங்கள் ஒப்பாரியாக ஆண்டு தோறும் நினைவு கூர்ந்தபடி கடத்துகின்றோம். திரும்பிப் பார்க்கையில் இந்த நூலகமும் அதன் எரிப்பும் அதைத் தொடர்ந்த சிதைவும், வலி நிறைந்த கசப்பான உண்மை ஒன்றைச் சொல்கின்றன.

ஒரு சமூகமாக நாம் வரலாற்றைப் பதிதலிலும் ஆவணப்படுத்தலிலும் முழுமையாகத் தோற்றிருக்கிறோம்.

நாம் சிலவற்றை வெளிப்படையாகவும் சுய விமர்சன நோக்கிலும் பேசியாக வேண்டும்.

யாழ்ப்பாண நூலக எரிப்புக்கு ஒரு சமூகப் பெறுமானம் உண்டு. 1959 இல் நூலகம் உருவாக்கப்பட்டு மிகக்குறுகிய காலத்தில் பெருந்தொகையான நூல்களைச் சேர்க்க முடிந்துள்ளது என்றால் அது அக்காலத்தில் வாழ்ந்தோரின் வாசிப்பின் மீதான ஆர்வமும், வாசித்ததைப் பகிரும் ஆர்வமும் நூல்களே வரலாற்றைக் கடத்தும் என்ற நோக்கமுமாகும்.

**வரலாறு**

1934 ஆம் ஆண்டு ஆனி மாதம் 9 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் கலாநிதி ஐசாக் தம்பையாவின் தலைமையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றே பொது நூலகத்தின் தோற்றத்திற்கு அடிகோலியது. இக்கூட்டக் காரியதரிசி திரு. சு.மு.செல்லப்பா அவர்கள் சிரமப்பட்டுத் திரட்டிய 1184ரூபா 22சதம் தான் முன்னோடியான பொது நூலகம் ஒன்றிற்கான மூலதனமாய் அமைந்தது. இதன் வழி ஆஸ்பத்திரி வீதியில் வாடகை அறை ஒன்றில் 844 நூல்களுடனும். 30 பருவ வெளியீடுகளுடனும், 1934 ஆம் ஆண்டு ஆவணி மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சிறியதொரு பொது நூலகம் வெகு விரைவில் நிதி வசதியின்றி இடர்ப்பட்ட போது அதனை யாழ். பட்டினசபை பொறுப்பேற்க முற்பட்டது.

யாழ். பட்டினசபையினர் பொறுப்பேற்ற இந் நூலகம் 1.1.1935 இல் வாடி வீட்டுக்குத் தெற்கிலுள்ள மேல்மாடிக்கு இடமாற்றம் செய்யப்பட்டு, அங்கு இயங்கி வந்தது. எனினும் பெருகிவரும் வாசகர்களின் தேவைகளை அதனால் ஈடுசெய்ய முடியவில்லை. இதனால் புதிய நூலகக் கட்டடத்தை அமைப்பதில் அதி வண பிதா லோங் மிகுந்த அக்கறை காட்டி வந்தார்கள். அவர்களது முயற்சியின் மூலம் நூலகத் துறையில் நிபுணத்துவம் வாய்ந்த கலாநிதி எஸ். ஆர். இரங்கநாதன் அவர்கள் நூலகத்தின் அமைப்பிற்கான திட்டங்களை வகுத்துக் கொடுக்க சென்னை அரசின் கட்டிடக் கலை நிபுணர் கே.எஸ். நாசிம்மன் வரைபடங்களைத் தயாரித்து உதவினார். கட்டட அடிக்கல் நாட்டு விழா 1953 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 28 ஆம் திகதி நடைபெற்றது. எனவே சகல வசதிகளையும் கொண்ட நவீன பொது நூலகக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள் 1952ஆம் ஆண்டு ஆனி மாதம் 14ஆம் நிகதி சாம் ஏ. சபாபதி தலைமையில், நடைபெற்ற ஒரு மகாநாட்டினை அடுத்து ஆரம்பிக்கப்பட்டன. மக்கள் ஆதரவுடன் திராவிடக் கலையம்சம் பொருத்திய எழில் மிகு அறிவுக்கோயில் ஒன்று வெகு விரைவில் பொது மக்களின் நிறைவான ஆதரவுடன் உருப்பெற ஆரம்பித்தது. பொது நூலகத்தின் முதற் கட்டம் பூர்த்தி செய்யப்பட்டு 11.10.1959 இல் அதி விமரிசையாக முதல்வர் அ.த.துரையப்பாவால் திறந்து வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நூலகத்தின் ஏனைய சுட்டிடங்களும் பூர்த்தி செய்யப்பட்டன. இக்கட்டடத்தில் அமைக்கப்பட்ட சிறுவர் நூலகத்தை நாம் சிறப்பித்துக் கூற வேண்டும். இவ்வாறாக, பூரணத்துவம் பெற்று இயங்கி வந்த இந்த நூலகத்தில் நூலகர் உட்பட 23 பேர் கடமையாற்றி வந்தார்கள்.

பேரிடியாய் 1981 ஜுன் 1ஆம் நாள் இரவில் தீயில் சாம்பலானது. ஆனால் யாழ்ப்பாணம் கலங்கவில்லை. மக்களின் மனதில் "நூலகம் மீண்டும் எழ வேண்டும்" என்ற உறுதி வேரூன்றியது. 1998 ஆம் ஆண்டில் புதிய கட்டடம் எழுப்பும் பணிகள் தொடங்கப்பட்டன. உள்ளூர் மக்கள், வெளிநாட்டு தமிழ் அகதிகள், பல நாடுகளின் அமைப்புகள் ஆகியோர் ஒன்றிணைந்து நூலகத்தை மறுபடியும்

தொடர்ச்சி▼



# சாம்பலிலிருந்து மலர்ந்த அறிவின் ஒளி...!

தொடர்ச்சி▲

எழுப்பினர். 2003 ஆம் ஆண்டு யாழ்ப்பாண நூலகம் மீண்டும் திறந்து வைக்கப்பட்டது. புதிதாக நவீன வசதிகளுடன், ஆயிரக்கணக்கான புத்தகங்கள் மீண்டும் சேகரிக்கப்பட்டன. மொத்தம் 15,910 சதுர அடிகளைக் கொண்ட யாழ். பொது நூலகம் அளவில், கொழும்பு மாநகர சபையின் பழைய நூலகத்தை விட விசாலமானது புதிய பொது நூலகத்துக்கு அடுத்ததாக உள்ளது. யாழ். மாவட்டத்திற்கு ஏன் வடமாகாணத்து அனைத்து நூலகங்களுக்குமே இப்பொது நூலகம் தலைமைத்துவம் வழங்கி வந்ததென்றால் அது மிகைக்கூற்றாகாது.

அப்போதே இந்நூலகத்தில் நூல் இரவல் பெறும் அங்கத்தவர்களாகப் பதினேழாயிரத்துக்கும் மேற்பட்ட வர்கள் பதிவு செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் இன்று, நிலைமை அவ்வாறு இல்லை. நூலகங்களின் பணி வாசிப்பை மட்டுமன்றித் தேடலையும் ஆய்வறிவையும் ஊக்குவிப்பதும் தக்கவைப்பதுமாகப் பரந்து உள்ளன. இதனாலேயேதான் நூலகத்தின் மீதான தாக்குதலை, யாழ். அறிவுப்புல சமூகத்தின் மீதான ஒரு தாக்குதலாகப் பலர் நோக்கினர். அன்றைய காலத்தில் கல்வி என்றாலே யாழ்ப்பாணம்தான் அவர்களை அசைக்க முடியாது என்ற ஒரு நிலை இருந்தது இன்று, அந்த அறிவுப்புல சமூகம் எங்கு நிற்கிறது?

யாழ்ப்பாண நூலக எரிப்பை முன்னிறுத்தி இரண்டு அடிப்படை விடயங்கள் தொட்டுக் காட்டப்பட வேண்டியுள்ளன. முதலாவது ஆவணப்படுத்தல், இரண்டாவது வரலாறு தொடர்பானது.

1981 இல் யாழ்ப்பாண நூலகம் தீக்கிரையாக்கப்பட்ட போது 97,000 நூல்களை இழந்தோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால் எரிந்த நூல்கள் என்னவென்று கூட எமக்குத் தெரியாது. அந்த காலப் பகுதியில் அங்கிருந்த முழுமையான நூற்பட்டியலைப் பெற்றுக் கொள்ளக் கூட இன்று வரை நாம் எந்தவொரு முயற்சியும் செய்யவில்லை. பகுதியான நூற்பட்டியல் கூட எம்மிடம் இல்லை. பல ஞானிகளால் கைப்படஎழுதப்பட்ட ஓலைச்சுவடிகள் கூட இன்று இல்லை அன்று தீக்கிரையாகிய பல நூல்கள் பிரதி அற்றவை அவை எம்மால் மீண்டும் பெற்றுக் கொள்ள முடியாதவை.

97,000 நூல்கள் எரிந்தன என்று சொல்கிறோமே. இந்தத் தொகை எவ்வாறு கணக்கிடப்பட்டது.

கிடைக்கின்ற தகவல்களின் படி, நூலகம் எரிய முன்னர் கடைசியாகப் பதியப்பட்ட நூலின் இலக்கத்தின் அடிப்படையில், இவ்வாறானதொரு தொகை கணக்கிடப்பட்டது. ஆனால், இங்கே ஒரு கேள்வி எழுகிறது. ‘அங்கு இருந்தவை வெறும் 97,000 நூல்கள் மட்டுமா’? அங்கிருந்த பத்திரிகைகள், சிறுபிரசுரங்கள், கையெழுத்துப் பிரதிகள், ஓலைச்சுவடிகள் போன்றவற்றின் நிலை என்ன? இவை நூல்கள் அல்ல அந்தத் தொகைக்குள் அடங்காதவை. இவற்றில் பெரும்பாலானவை ஒற்றைப் பிரதிகள் இவை குறித்த எந்தவொரு கணக்கெடுப்போ, குறிப்போ எம்மிடம் இல்லை.

ஆனால் எம் மக்களோ அழிந்துவிட்டன அழிந்துவிட்டன என மட்டுமே கூறிக்கொண்டே இருக்கிறார்களே தவிர அதில் அழிக்கப்பட்டவற்றை மீட்டெடுக்கவே, எவை அழிக்கப்பட்டன என்று கூட அக்கறையற்றவர்களாக மாறிவிட்டார்கள். நூலகம் மீண்டும் அமைக்கப்பெற்று விட்டது.

ஆனால் வாசிப்பு பழக்கமோ இவ் நான்கு தசாப்தத்துக்குள் சிதைவடைந்து அருகி வந்துவிட்டது. நூலகத்தில் தொலைத்ததை விட இவ் 44 ஆண்டுகளில் கவனக்குறைவாலும், அக்கறையின்மையாலும் நாம் தொலைத்தது அதிகம்.

நீங்கள் எங்கிருந்து வந்தீர்கள்? இந்த நாட்டுக்கு வந்தேறுகுடிகள் என்று எம்மை கூறுவதற்கும் நாம் பதில் சொல்ல முடியாததற்கும் காரணம் அவர்களிடம் ஆவணங்கள் உள்ளது எம்மிடம் ஆவணங்கள் இல்லை நாம் ஆவணப்படுத்தவும் நினைத்ததில்லை.

யாழ்ப்பாண நூலகம் என்பது வெறும் புத்தகங்கள் நிறைந்த கட்டடமல்ல அது மக்களின் உயிரும், உணர்வும், வரலாறும் கலந்தது. அறிவின் தீபம் எரிந்தபோதும் அந்த தீபத்தின் ஒளி மக்களின் மனதிலிருந்து மங்கவில்லை.

எத்தனை முறை அழிக்கப்பட்டாலும் தீக்குள் இருந்து மீண்டுவரும் பீனிக்ஸ் பறவை போல ஒவ்வொரு முறையும் அறிவும் பண்பாடும் மீண்டும் பிறக்கிறது என்பதை யாழ்ப்பாணம் உலகுக்கு நிரூபித்தது.



# டில்லியில் கட்டுப்பாட்டு அமைப்பில் கோளாறு; 800 இற்கு மேற்பட்ட விமான சேவைகள் பாதிப்பு

இந்தியாவின் பரபரப்பான விமான நிலையங்களில் ஒன்றான டில்லி இந்திரா காந்தி பன்னாட்டு விமான நிலையத்தில், விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, 800 இற்கும் மேற்பட்ட உள்நாட்டு மற்றும் சர்வதேச விமானங்களின் சேவைகள் பாதிக்கப்பட்டன.

இந்தக் கோளாறு காரணமாகப் பயணிகள் பெரும் குழப்பத்துக்கு ஆளாகினர். இதனால் பயணிகள் விமான நிலையத்திலேயே காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அவர்கள் தங்கும் வசதி, உணவு வசதிகளை விமான நிலையம் ஏற்பாடு செய்தது.

இந்த விமான நிலையத்துக்கு தினமும் 1,500 இற்கும் மேற்பட்ட விமானங்கள் வந்து செல்கின்றன. இங்குள்ள விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுத் தரவுகளை நிர்வகிக்கும் முக்கியமான தானியங்கி செய்தி மாற்று அமைப்பு (ஏ.எம்.எஸ்.எஸ்.) செயலிழந்ததே இந்தத் தாமதத்திற்குக் காரணம் என இந்திய விமான நிலைய ஆணையம் அதிகாரபூர்வமாகத் தெரிவித்துள்ளது. இப்படி ஒரு பிரச்சினை இதற்கு முன் எப்போதும் நடந்தது இல்லை என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

பொதுவாக விமானங்களின் திட்டமிடல், வழித்தட அனுமதி, வானிலை தகவல்கள் உள்ளிட்ட முக்கியச் செயல்பாட்டுச் செய்திகளை இந்த ஏ.எம்.எஸ்.எஸ். அமைப்பு தானாகவே விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்கு வழங்கும்.

இந்தத் தானியங்கி அமைப்பு செயலிழந்ததால், அதிகாரிகள் அனைத்து விமானத் திட்டங்களையும் தாங்களே கையாள வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் ஏற்பட்ட காலதாமதத்தால், விமான போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது.

இந்த பிரச்சினை காரணமாக டில்லி விமான நிலையத்தில் 800 இற்கும் மேற்பட்ட விமானங்கள் தாமதமானதுடன், 20 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. இண்டிகோ, ஏர் இந்தியா, ஸ்பைஸ்ஜெட் உள்ளிட்ட முன்னணி விமான நிறுவனங்களின் சேவைகளும் இதில் அடக்கம். டில்லியில் ஏற்பட்ட இந்தத் தொழில்நுட்ப சிக்கலின் விளைவாக, மும்பை, ஜெய்ப்பூர் போன்ற பிற மாநில விமான நிலையங்களிலும் விமானச் சேவைகள் பாதிக்கப்பட்டன.

உடனடியாக பிரச்சினையை கண்டறிந்த தொழில்நுட்ப குழுக்கள் துரிதமாகச் செயல்பட்டு, ஏ.எம்.எஸ்.எஸ். அமைப்பைச் சீரமைக்கும் பணியில் ஈடுபட்டனர். தற்போது, ஏ.எம்.எஸ்.எஸ். அமைப்பு மீண்டும் இயல்பு நிலைக்குக் கொண்டுவரப்பட்டு, செயல்படத் தொடங்கிவிட்டதாக இந்திய விமான நிலைய ஆணையம் அறிவித்துள்ளது.

எனினும், தரவுகளில் ஏற்பட்ட தேக்கம் காரணமாகத் தானியங்கிச் செயல்பாடுகளில் சிறு தாமதங்கள் தொடரக்கூடும் என்றும், விரைவில் முழுமையான இயல்புநிலை திரும்பும் என்றும் ஆணையம் உறுதி அளித்துள்ளது.

பயணிகளுக்கு ஏற்பட்ட சிரமங்களுக்காக இந்திய விமான நிலைய ஆணையம் வருத்தம் தெரிவித்துள்ளது. விமான நிறுவனங்களும் பயணிகளிடம் வருத்தம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளன.

# தி.மு.கவை எந்த நபராலும் தொட்டுப் பார்க்க முடியாது

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவிப்பு




இன்றைக்கு யார் யாரோ கிளம்பி வந்து தி.மு.கவை அழித்துவிடலாம் என கனவு காண்கிறார்கள். ஆனால், தி.மு.கவை எந்த நபராலும் தொட்டுக் கூட பார்க்க முடியாது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

சென்னையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் மேலும் உரையாற்றுகையில்,

"நெருக்கடி காலக்கட்டத்தில் தி.மு.க. சந்தித்த தியாகங்கள் நிறைய உண்டு. அதையெல்லாம் கடந்து வந்ததால்தான் இன்றைக்கும் தி.மு.க. கம்பீரமாக உயர்ந்து வருகிறது. ஆனால், இன்றைக்கு யார் யாரோ கிளம்பி, இந்தக் கட்சியை அழித்து விடலாம் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள். எந்தக் கொம்பனாலும் இந்த இயக்கத்தை தொட்டுக்கூட பார்க்க முடியாது.

இதற்கிடையே வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் (எஸ்.ஐ.ஆர்) தமிழகத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இதை எதிர்த்து அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டி தீர்மானம் போட்டு அந்த அடிப்படையில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளோம். சட்டப் போராட்டம் ஒரு பக்கம் நடந்தாலும் எஸ்.ஐ.ஆர். பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. எனவே, தி.மு.க. தொண்டர்கள், நிர்வாகிகள் அதை தீவிரமாக கண்காணிக்க வேண்டும்.

இதுதொடர்பாக ஏதேனும் சந்தேகம் இருந்தால் அதை சரிசெய்ய தி.மு.க. சார்பில் உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளது. இதையடுத்து உங்களுக்கு ஏதேனும் உதவிகள் தேவைப்பட்டால், அந்தத் தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தெளிவு பெறலாம்."என்று தெரிவித்துள்ளார்.






# நீரிழிவு, உடல் பருமன் இருந்தால் இனி அமெரிக்கா விசா இல்லை!

அமெரிக்காவில் வசிப்பதற்காக விசா விண்ணப்பிக்கும் வெளிநாட்டு பிரஜைகளுக்கு, நீரிழிவு அல்லது உடல் பருமன் போன்ற உடல்நலக் குறைபாடுகள் இருந்தால், அவர்களின் விசா நிராகரிக்கப்படலாம் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் புதிய வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க வெளியுறவுத் துறை வெளியிட்டுள்ள இந்த வழிகாட்டுதல்களின்படி, இத்தகைய உடல்நிலை சிக்கல்கள் உள்ளவர்கள் அமெரிக்காவின் வளங்களுக்கு சுமையாக மாறக்கூடும் என்பதால், அவர்களின் விசா விண்ணப்பத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதய நோய்கள், புற்றுநோய்கள், சுவாச நோய்கள் மற்றும் மனநல பிரச்சினைகள் உட்பட பல நாள்பட்ட நோய்களுக்கு அதிக செலவு ஆகும் என்பதால், விண்ணப்பதாரரால் தனது முழு ஆயுட்காலத்திலும், அரசின் பண உதவியை நாடாமல் அந்த செலவுகளை சமாளிக்க முடியுமா என்பதை விசா அதிகாரிகள் மதிப்பிட வேண்டும்.

அதோடு விண்ணப்பதாரரின் குழந்தைகள் அல்லது வயதான பெற்றோர்கள் போன்ற குடும்ப உறுப்பினர்களின் ஆரோக்கியத்தையும், இது அவர்களின் வேலைவாய்ப்பைப் பாதிக்குமா என்பதையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அதேவேளை, ட்ரம்ப் அரசின் இந்த நடவடிக்கைக்கு சட்ட வல்லுநர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

மருத்துவ பயிற்சி இல்லாத விசா அதிகாரிகள், தனிப்பட்ட சார்பு அடிப்படையில் ஊகங்களின் மூலம் முடிவெடுப்பது தவறானது என்று அவர்கள் விமர்சித்துள்ளனர்.




# 5,000 விமான சேவைகள் அமெரிக்காவில் நிறுத்தம்

தற்போது அமெரிக்க அரசாங்கம் இடைநிறுத்தப்பட்ட நிலையில் உள்ளது.

இதன் காரணமாக விமான போக்குவரத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அதன்படி 5,000 விமானங்கள் ரத்து அல்லது தாமதமாக புறப்பட்டன என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்காவின் விமானப் போக்குவரத்து நிறுத்தம் காரணமாக, அந்நாட்டின் 40 முக்கிய விமான நிலையங்களின் செயல்பாடுகள் 10 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

நேற்றைய நிலவரப்படி ஆயிரக்கணக்கான விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலை தொடர்ந்தால் விமானங்கள் 20 சதவீதம் ரத்து செய்யப்படலாம் என அமெரிக்க போக்குவரத்து செயலாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



# மருந்து விலை குறைப்பு ஒப்பந்தத்தின்போது மயங்கி வீழ்ந்தார் மருத்துவ நிறுவன நிர்வாகி

## அதிர்ச்சியில் ட்ரம்ப்

அமெரிக்காவின் ஓவல் அலுவலகத்தில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் அருகே இருந்த நிர்வாகி ஒருவர் திடீரென மயக்கமடைந்த சம்பவம் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் ஓவல் அலுவலகத்தில், உடல் பருமன் குறைப்பு மருந்துகளின் விலையைக் குறைக்கும் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின்போது, மருத்துவ அதிகாரிகள் உள்பட மருந்து நிறுவனங்களின் நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, மருந்து விலைக் குறைப்பு குறித்து ட்ரம்ப் அறிவிக்கும்போது, அவரின் பின்னால் நின்றுகொண்டிருந்த நோவோ நார்டிஸ்க் நிறுவனத்தின் நிர்வாகியான கார்டன் ஃபிண்ட்லே என்பவர் திடீரென மயக்கமடைந்து கீழே விழுந்தார்.

இருப்பினும், அவருக்கு உடனடியாக சிகிச்சை அளிக்கப்பட்டு, தற்போது நலமுடன் உள்ளார்.



இந்த ஒப்பந்தத்தின் மூலம் நிறுவனங்கள் தயாரிக்கும் மருந்துகளை, நுகர்வோருக்கு நேரடியாக விற்க முடியும் என்று கூறப்படுகிறது.

மேலும், மில்லியன் கணக்கான அமெரிக்கர்களுக்கு ஜி.எல்.பி -1 மருந்தை மிகவும் மலிவான விலையில் வழங்குவதற்கு இந்த ஒப்பந்தம் திட்டமிட்டுள்ளது.




கனடா முரசு

சனிக்கிழமை | 08/11/2025

**கனடாவில் தற்காலிக குடியேறிகள் எண்ணிக்கை குறைப்பிற்கு எதிர்ப்பு**



02▶



# கனடா விசா பெற்றுள்ளவர்களுக்கு புதிய ரத்து விதிகள், வழிகாட்டிகள்

**கனடாவின் குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைப்பு(IRCC), விசா மற்றும் தற்காலிக குடியேற்ற ஆவணங்களுக்கான (Temporary Resident Visa, eTA, Work Permit, Study Permit) புதிய ரத்து விதிகள் மற்றும் வழிகாட்டிகளை வெளியிட்டுள்ளது.**

**இவ்விதிகள், கனடாவுக்கான பயணிகள், மாணவர்கள் மற்றும் தொழிலாளர் அனுமதி பெற்றவர்களுக்கு முக்கியமான மாற்றங்களை கொண்டுள்ளன.**

**புதிய வழிகாட்டியின் படி, தற்போது ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த தற்காலிக குடியேற்ற ஆவணங்களை பல்வேறு காரணங்களுக்காக ரத்து செய்யப் படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அவற்றில் முக்கியமானவை நிர்வாகப் பிழைகள், தகுதி அல்லது அனுமதி நிபந்தனைகள் பூர்த்தியாவதில்லை என்ற நிலைகள், அல்லது விண்ணப்பத்தின் போது வழங்கப்பட்ட தகவல்கள் தவறானதாக இருப்பது ஆகியவை அடங்கும்.

அத்தோடு, விண்ணப்பதாரருக்கு பின்னர் வழங்கப்பட்ட பிற அனுமதிகள் மறுக்கப்பட்டிருந்தாலோ, பாதுகாப்பு அல்லது போலி ஆவணங்கள் தொடர்பான சந்தேகங்கள் எழுந்தாலோ, அவர்களின் விசா ரத்து செய்யப்படலாம் எனவும் IRCC தெரிவித்துள்ளது.

இதேவேளை, விண்ணப்பதாரர் நிரந்தர குடிமகனாகி விட்டால், கடச்சீட்டை இழந்தோ அல்லது ரத்து செய்யப்பட்டாலோ, அல்லது விண்ணப்பதாரர் இறந்துவிட்டாலோ, வழங்கப்பட்ட விசா தானாகவே செல்லாததாகி விடும்.

இதே விதிகள் eTA (Electronic Travel Authorization), வேலை அனுமதி (Work Permit), மற்றும் படிப்பு அனுமதி (Study Permit) ஆகியவற்றுக்கும் பொருந்தும்.

இந்த மாற்றங்கள், கனடாவுக்கான பயணம், வேலை அல்லது படிப்பிற்காக அனுமதி பெற்றவர்களுக்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் கொண்டவை.

ஒரு முறை விசா அல்லது அனுமதி வழங்கப்பட்ட பிறகும், விண்ணப்பதாரரின் நிலைமையில் மாற்றம் ஏற்பட்டால், உதாரணமாக வேலை இழப்பது, சட்டபூர்வமற்ற நிலைக்கு வருவது, அல்லது தவறான தகவல் வழங்கப்பட்டிருப்பது போன்ற காரணங்களால் அந்த ஆவணங்கள் ரத்து செய்யப்படலாம்.

எனவே, விண்ணப்பதாரர்கள் தங்கள் தகவல்களை சரியாகவும் தற்போதைய நிலைக்கு ஏற்பவும் புதுப்பித்து வைத்திருக்க வேண்டும் என IRCC எச்சரித்துள்ளது.

IRCC மேலும், விசா வழங்கப்பட்ட பிறகு உங்கள் நிலைமையில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டால் அவற்றை உடனடியாக அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளது.

குறிப்பாக, வேலை, படிப்பு, குடியேற்ற நிலை போன்றவை மாறியிருந்தால் அதுவும் ஆவண ரத்து செய்யும் காரணமாக இருக்கலாம். எனவே விண்ணப்பதாரர்கள் தங்கள் ஆவணங்களையும் தகவல்களையும் புதுப்பித்து வைத்திருப்பது மிகவும் அவசியம்.

இந்த புதிய விதிகள், கனடாவுக்குச் செல்லும் முன் மற்றும் பிறகு தங்கள் குடியேற்ற ஆவணங்களை கவனமாக பராமரிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியுள்ளன.

தவறான தகவல் அல்லது புதுப்பிக்கப்படாத நிலை காரணமாக விசா ரத்து செய்யப்படும் அபாயம் உள்ளதால், விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களில் முழுமையான உண்மையான தகவல்களை வழங்க வேண்டும்.

# கனடாவில் தற்காலிக குடியேறிகள் எண்ணிக்கை குறைப்பிற்கு எதிர்ப்பு

கனடாவில் தற்காலிக குடியேறிகள் எண்ணிக்கை குறைப்பிற்கு கியுபெக் மாகாண அரசாங்கம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

கனடாவின் குவெபெக் மாகாணம் பல ஆண்டுகளாக ஓட்டாவாவிடம் தற்காலிக குடியேற்றங்களை குறைக்க வேண்டுமெனக் கோரிவந்த நிலையில், இப்போது அதே மாகாணம் "மத்திய அரசாங்கம் ஆபத்தான விளையாட்டில் ஈடுபட்டுள்ளது" என குற்றம் சாட்டியுள்ளது.

குவெபெக் குடியேற்ற அமைச்சர் ஜீன்-பிரான்சுவா ரோபெர்ஜ் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

மத்திய அரசு தற்காலிக வெளிநாட்டு தொழிலாளர்களின் எண்ணிக்கையை குறைக்க எடுத்த முயற்சிகள் மாகாணத்தின் பல பிரதேசங்களில் உள்ள தொழில் நிறுவனங்களை ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய அரசாங்கத்தின் தீர்மானங்களை புரிந்து கொள்ள முடியவில்லை எனுவும், நெருக்கடிநிலையை உருவாக்க முயற்சிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இது, தற்காலிக குடியேற்றங்களை குறைக்க ஓட்டாவாவைத் தொடர்ந்து



அழுத்தம் கொடுத்து வந்த குவெபெக் அரசின் அணுகுமுறையில் பெரிய மாற்றமாகக் கருதப்படுகிறது.

முதல்வர் பிரான்சுவா லெகோ இதற்கு முன்பு, தற்காலிக குடியேறிகள் வீடமைப்பு, சுகாதாரம், கல்வி மற்றும் பிரஞ்சு மொழியில் அழுத்தத்தை ஏற்படுத்துவதாகக் கூறியிருந்தார்.

ஆனால் அண்மைய மாதங்களில், புதிய மத்திய அரசின் கட்டுப்பாடுகள் கியுபெக்கில் கடுமையான தொழிலாளர் பற்றாக்குறையை ஏற்படுத்தும் என தொழில் உரிமையாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தஞ்சம் தேடுபவர்கள் மற்றும் கூட்டாட்சி கட்டுப்பாட்டில் உள்ள பிற தற்காலிக குடியேற்றிகள் எண்ணிக்கை குறைய வேண்டும் என்றே தாம் விரும்புவதாகவும், ஆனால் தற்காலிக வெளிநாட்டு தொழிலாளர் திட்டத்தில் எந்தக் குறைப்பையும் தாம் கோரவில்லை எனவும் கியுபெக் அமைச்சர் விளக்கமளித்துள்ளார்.



# மனைவியின் போலி நிர்வாண படங்களை பகிர்ந்தாரென கணவன் மீது குற்றச்சாட்டு

மனைவியின் போலி நிர்வாணப் படங்களை சமூக ஊடகங்கள் ஊடாக வெளியிட்டார் என கூறப்படும் குற்றச்சாட்டுக்குள்ளான ஒருவரை நிரபராதி என தெரிவித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்த வழக்கு ஒன்ராறியோ நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட போதே குறித்த தீர்ப்பை நீதிபதி அறிவித்துள்ளார்.

மேற்படி நபரின் நடத்தை "தார்மீக ரீதியாக கண்டிக்கத்தக்கதாகவும், வெளிப்படையாக கூறினால், ஆபாசமாகவும்" இருக்கலாம் என்று நீதிபதி சுட்டிக்காட்டினார்.

எனினும், குற்றவியல் சட்டத்தின் படி அது குற்றமாகாது என நீதிபதி கூறியுள்ளார். இந்த சம்பவம் குறித்ததான விசாரணைகளில் நிர்வாணப் புகைப் படத்தில் உள்ள உடல் அவருடைய மனைவியுடையது அல்ல எனவும் அது டிஜிட்டல் முறையில் மாற்றிய மைக்கப்பட்டது எனவும் தெரிவித் துள்ளார்.

இந்த விடயத்தை அடிப்படையாகக் கொண்டு குற்றவியல் சட்டத்தின் கீழ் நெருக்கமான படங்களின் வரையறைக்கு எந்த புகைப்படமும் பொருந்தவில்லை என்று நீதிபதி கூறினார்.



# கனடாவில் அதிகரிக்கும் உணவுகளின் விலைகள்

## மக்களுக்கு பெரும் பாதிப்பு

கனடாவில் உணவுப் பொருள்களின் விலை உயர்வால் கனடியர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

கனடியர்களில் ஐந்தில் ஒருவர் கடந்த ஒரு வருடத்தில் குறைந்தபட்சம் ஒரு கட்டணத்தை செலுத்தாமல் தவறவிட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

நானோஸ் ஆய்வு நிறுவனம் நடத்திய புதிய கருத்துக்கணிப்பு மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

இந்த ஆய்வில், 55 வயதுக்கு குறைவானவர்கள், உணவுக்காக சிற்றூந்து கடன், கடன் அட்டை அல்லது மின் சார கட்டணங்களை நிலுவையில் வைக்கும் வாய்ப்பு நான்கு மடங்கு அதிகம் என்று கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், மாதாந்த செலவுகள் தொடர்ந்தும் உயர்வடைந்து செல்வதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

18 முதல் 34 வயதுடையோரில் 18.1 வீதமானோர் சில சமயங்களில் அல்லது அடிக்கடி கட்டணம் செலுத்த தவறியுள்ளனர் என தெரிவிக்கின்றனர்.

35 முதல் 54 வயதினரிலும் இதே போல 17.9 வீதமானோர் தெரிவித்துள்ளனர். ஆனால் 55 வயது மேற்பட்டவர்களில் அது வெறும் 4.2 வீதமாக மட்டுமே இருந்தது என ஆய்வுகளில் தெரிவிக்கப்படுகின்றது.

